www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2018

K

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் :

## உயிரியல்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 35

பகுதி - I உயிரி-தாவரவியல் (18 மதிப்பெண்கள்)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 4 x 1 = 4

1. வேர் நுனி கோட்பாடு பற்றிய தவறான கூற்றினைக் கண்டறிக:
   i) கப்பே உடல் பகுதியையும் மற்றும் கோர்ப்பர் மூடி பகுதியையும் உருவாக்குகிறது.
   ii) உறக்க மைய பகுதி வேர் ஆக்குதிசு பகுதியிலமைந்த செயலுக்கமற்ற மற்றும் ஹார்மோன் உற்பத்தி செய்கின்ற பகுதியாகும்.
   iii) உறக்க மைய பகுதி தண்டின் ஆக்குதிசு பகுதியிலமைந்த செலுக்கமற்ற மற்றும் ஆக்குதிசுவை உருவாக்கும் பகுதியாகும்.
   iv) ஹிஸ்டோஜன் கொள்கையின்படி பிளிரோம் பகுதி புறத்தோலை உருவாக்குகிறது.

   a) (i),(iii),(iv) b) (ii) and (iii) c) (iii) and (iv) d) (ii) and (iv)

2. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| i) | டுனிகா | - | A. ஓபியோகிளாசம் |
| ii) | கார்பஸ் | - | B. தண்டு நுனியின் புறப்பகுதி புறத்தோலை உருவாக்குகிறது |
| iii) | மையமை சைலம் | - | C. தண்டு நுனியின் உள்பகுதி புறணி மற்றும ஸடீலை உருவாக்குகிறது |
| iv) | இடைநிலை சைலம் | - | D. செலாஜினேல்லா |

   a) (i)-B, (ii)-A, (iii)-D, (iv)-C b) (i)-C, (ii)-A, (iii)-B, (iv)-D
   c) (i)-C, (ii)-B, (iii)-D, (iv)-A d) (i)-B, (ii)-C, (iii)-D, (iv)-A

3. நுனி திறவுகளற்ற இறந்த வரம்புடைய குழிகளை கொண்ட செல்கள், உயிருள்ள மற்றும் உட்கரு அற்ற செல்களுக்கு எடுத்துக்காட்டுகள் முறையே
   a) சைல குழாய்கள் மற்றும் டிரக்கீடுகள் b) சல்லடை குழாய்கள் மற்றும் டிரக்கீடுகள்
   c) டிரக்கீடுகள் மற்றும் சல்லடை குழாய்கள் d) டிரக்கீடுகள் மற்றும் சைல குழாய்கள்

4. புறத்தோலிலிருந்து பித் வரையிலான இரண்டாம் நிலை வளர்ச்சியின் சரியான வரிசையினை கண்டறிக.
   a) புறத்தோல் --- பெல்லம் --- பெல்லோஜன் --- பெல்லோடெர்ம் --- முதல் நிலை புளோயம் --- இரண்டாம் நிலை புளோயம் --- வாஸ்குலார் கேம்பியம் --- இரண்டாம் நிலை சைலம் --- முதல் நிலை சைலம் --- பித்
   b) புறத்தோல் --- பெல்லோடெர்ம் --- பெல்லோஜன் --- பெல்லம் --- முதல் நிலை புளோயம் --- இரண்டாம் நிலை புளோயம் --- வாஸ்குலார் கேம்பியம் --- இரண்டாம் நிலை சைலம் --- முதல் நிலை சைலம் --- பித்
   c) புறத்தோல் --- பெல்லம் --- பெல்லோஜன் --- பெல்லோடெர்ம் --- முதல் நிலை புளோயம் --- இரண்டாம் நிலை புளோயம் --- வாஸ்குலார் கேம்பியம் --- முதல் நிலை சைலம் --- இரண்டாம் நிலை சைலம் --- பித்
   d) புறத்தோல் --- பெல்லோஜன் --- பெல்லோடெர்ம் --- பெல்லம் --- முதல் நிலை புளோயம் --- இரண்டாம் நிலை புளோயம் --- வாஸ்குலார் கேம்பியம் --- இரண்டாம் நிலை சைலம் --- முதல் நிலை சைலம் --- பித்

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு 30 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி:** 3 x 2 = 6

*(வினா எண். 7க்கு கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்)*

5. ஆஞ்சியோஸ்பெர்ம் கட்டைகளை துளைகளுடைய கட்டை என ஏன் அழைக்கிறோம்? ஆஞ்சியோஸ்பெர்ம் மற்றும் ஜிம்னோஸ்பெர்ம் கட்டைகளை வேறுபடுத்துக.
6. மித வெப்ப மண்டல பகுதிகளில் வாஸ்குலார் கேம்பியத்தின் செயல்பாடு ஆண்டு முழுவதும் சீராக இருப்பதில்லை. எனில் இக்காலங்களில் எவ்வகை கட்டைகள் தோன்றுகிறது?
7. ஒன்றிணைந்த, ஒருங்கமைந்த மற்றும் திறந்த வாஸ்குலார் கற்றையின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
8. சல்லடை குழாய் செல்களின் இரண்டு சிறப்பு பண்புகளைக் குறிப்பிடுக.
9. வேர்நுனி ஆக்குத்திசுவின் நான்கு ஹிஸ்டோஜன் பகுதிகளைக் கூறுக.

**III. ஏதேனும் ஒரு வினாவிற்கு 45 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி:** 1 x 3 = 3

10. சூழ்ந்தமைந்த வாஸ்குலார் கற்றையின் வகைகளை படத்துடன் விவரி.
11. மேல் கீழ் வேறுபாடடைந்த இலையின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

**IV. ஏதேனும் ஒரு வினாவிற்கு விரிவான விடையளி:** 1 x 5 = 5

12. இருவித்திலை தண்டு மற்றும் ஒருவித்திலை தண்டின் உள்ளமைப்பு, வேறுபாடுகளை எழுதுக

*(அல்லது)*

எவ்வகையில் வழிச்செல்கள் ஆரப்போக்கு நீர் பரவல் முறைக்கு உதவுகிறது? நீர் கடத்தப்படுதலில் காஸ்பாரின் பட்டையின் பங்கினைக் குறிப்பிடுக.

http://www.trbtnpsc.com/2018/11/11th-standard-plus-one-2nd-mid-term-exam-question-papers-answer-keys-time-table-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - II உயிரி-விலங்கியல் (17 மதிப்பெண்கள்)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 2 x 1 = 2

1. இவைகளில் துணை கழிவு நீக்க உறுப்பு எது?
   a) கல்லீரல் b) இரைப்பை
   c) குடல் d) இதயம்
2. தசை நாரிலுள்ள ஆக்ஸிஜனை சேமிக்கும் நிறமி
   a) மையோகுளோபின் b) ட்ரோபோனின்
   c) மையோசின் d) ஆக்டின்

**II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி:** 2 x 2 = 4

3. திசுக்களில் உள்ள ஊடுகலப்பு அழுத்தத்தை கட்டுப்படுத்துவதே ஊடுகலப்பு ஒழுங்குபாடு ஆகும். ஊடுகலப்பு ஒத்தமைவான்கள் என்றால் என்ன?
4. நீண்டகாலமாகப் படுக்கையில் இருக்கும் நோயாளிகள், தசைகளைத் தொடர்ந்து பயன்படுத்தாததால் அவை வலுவிழக்கின்றன. தசைச்சிதைவு நோய் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
5. கண் குழிகள், நாசிப்பள்ளம் ஆகியவை மண்டையோட்டில் உள்ள முக்கியத் துளைகள். மண்டையோட்டு பெருந்துளை எங்கு அமைந்துள்ளது? அதன் பணி யாது?

**III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி:** 2 x 3 = 6

6. ADH ஹார்மோன் குறைவால் ஏற்படும் நோய் யாது? அதன் அறிகுறிகள் யாவை?
7. சிறுநீரகத்தின் நீள்வெட்டுத் தோற்றம் படம் வரைந்து பாகங்கள் குறிக்கவும்.
8. நைட்ரஜன் கழிவுப் பொருட்களை வெளியேற்ற சிறுநீரகங்கள் தவறுவதால் யூரியா போன்றவை உடலில் தேங்கி சிறுநீர் வெளியேற்றம் பெருமளவில் குறைகிறது. இவற்றை சரிசெய்யும் முறை பற்றி எழுதுக.

**IV. கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிக்கவும்:** 1 x 5 = 5

9. i) தசைச் சுருக்கச் செயலானது எதைப் பொறுத்தது?
   ii) தசைச் சுருக்கம் பற்றிய சறுக்கும் இழை கோட்பாடு கூறியவர் யார்? கோட்பாடு பற்றி எழுதவும்.
   iii) தசைச் சுருக்க வகைகள் பற்றி எழுதுக.

*(அல்லது)*

விலங்குலகத்தில் பலவகையான கழிவுநீக்க அமைப்புகள் உள்ளன. பல்வேறு விலங்குகளின் கழிவுநீக்க உறுப்புகள் பற்றி விவரி.

******

www.Padasalai.Net

http://www.trbtnpsc.com/2018/11/11th-standard-plus-one-2nd-mid-term-exam-question-papers-answer-keys-time-table-download.html